## 15

## குடும்பம் ஆவியானவர் வாசம் செய்யும் ஸ்தலம் ...

# குடும்பத்திலுள்ள சந்தோஷம்

## [கலாத்தியர் 5:22, 23]

*இந்த பாடவரிசையில் நாம் கலந்தாலோசித்து வருவது ஆவிக்கேற்ற கனி காணப்படுகிற வெற்றிகரமான குடும்பத்தை உருவாக்குவதைப்பற்றினதாகும். "ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை" (கலாத்தியர் 5:22, 23) என்று பவுல் சொன்னார்.*

*இந்த பாடத்தின் நோக்கம் ஆவியின் கனியின் இரண்டாம் பண்பைப்பற்றினதாகும்: "சந்தோஷம்." வெற்றிகரமான குடும்பத்தை வகையறுக்கும் போது, மற்ற காரியங்களோடு நாம் சொன்னோம் இதுவே சந்தோஷமான குடும்பம் என்று, இந்த பண்பானது அந்த அவசியத்துடன் சம்பந்தப்பட்டதாக இருக்கிறது: மகிழ்ச்சியான குடும்பம் என்பது சந்தோஷமான குடும்பமாகும். ஒரு குடும்பம் ஒன்றாக இணைந்திருந்தாலும், துன்பத்தையும் சந்தோஷமின்மையையும் தவிர வேறொன்றையும் ஒருவருக்கும் கொடுக்கமுடியாதிருந்தால், அது வெற்றிகரமான குடும்பம் அல்ல.*

*சந்தோஷத்தின் மூலம் எது? நாம் ஒருவேளை இப்படி சிந்திக்கலாம், சந்தோஷம் என்பது உலகத்திலுள்ள சம்பத்துகளிலும், பணம் மற்றும் சொத்தை குவித்து வைப்பதினால் வரும் என்று நினைக்கலாம். உண்மையில் பொருளாதார பாதுகாப்பு மற்றும் ஆறுதல் நமது வாழ்க்கையை இன்னும் அதிகமாக இன்பகரமாக்கும். ஏழ்மை என்பது நற்குணம் அல்ல. இருப்பினும், அதிகமான பணம் வைத்திருக்கும் மக்களே அதிகமாக மகிழ்ச்சியற்ற குடும்பமாகும், ஆனால் மற்றவர்கள் குறைந்த பணம் வைத்திருந்து சந்தோஷமான குடும்பத்தை நடத்தி வருகின்றனர். குடும்பத்தில் உள்ள சந்தோஷம் அல்லது மகிழ்ச்சியானது, சொத்தினால் வருவதில்லை, அல்லது நம்மிடம் உள்ள சம்பத்துகளினால் உத்திரவாதப்படுத்தப்படுவதில்லை.*

*சந்தோஷம் என்பது நீதிமான்களாக்கப்படுவதால் வருவதாகும். குடும்பத்திலுள்ளவர்கள் கிறிஸ்துவால் இரட்சிக்கப்பட்டிருந்தால் அல்லது நீதி மான்களாக்கப்பட்டிருந்தால் குடும்பத்தில் சந்தோஷம் எப்பொழுதும் தங்கும், புதிய ஏற்பாட்டில் காண்கிறவண்ணமாக சந்தோஷத்தின் தன்மையை நாம் விளக்கப்படுத்துவோம், மற்றும் பின்பு இப்படிப்பட்டதான சந்தோஷம் நம் சொந்த குடும்பத்தில் கொண்டிருப்பதற்குத் தேவையானது என்ன என்று நாம் பார்ப்போம்.*

## சந்தோஷத்தின் தன்மை

உண்மையான சந்தோஷம் என்பது நீதியினால் வருவதாகும் என்று புதிய ஏற்பாட்டிலும் குடும்பத்திலும் உள்ளடக்கப்பட்ட "சந்தோஷத்தை" தெளிவாக காணமுடியும்.

**சந்தோஷத்தின் முக்கியத்துவம்**

புதிய ஏற்பாடு சந்தோஷம் நிறைந்ததாகும்! "சந்தோஷம்" என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் *chara* என்பதாகும். "புதிய ஏற்பாடு சந்தோஷத்தின் புத்தகம்" என்று வில்லியம் பார்க்ளே கூறினார். அதுமட்டுமல்லாமல் "புதிய ஏற்பாட்டில் மகிழ என அர்த்தம் கொண்ட *chairein* என்ற வினைச்சொல் எழுபத்திரண்டு முறையும் மற்றும் மகிழ்ச்சி என அர்த்தம் கொண்ட *chara* என்ற வார்த்தை அறுபது முறையும் கூறப்பட்டுள்ளது".[1]

புதிய ஏற்பாட்டில் எல்லா இடத்திலும் நாம் மகிழ்ச்சியை அனுபவிக்க வேண்டும் என்றே தேவன் விரும்புகிறார் என்றே குறிப்பிடுகிறது. இயேசுவின் பிறப்பு என்பது "பெரிய சந்தோஷம் அளிக்கக் கூடிய நல்ல செய்தியாகும்" (லூக்கா 2:10). இயேசு "என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்" என்றார் (யோவான் 15:11). அவருடைய உயிர்தெழுதல் அறிவிக்கப்பட்ட பின்பு சீஷர்கள் "மகா சந்தோஷமாய்" புறப்பட்டு போனார்கள் (மத்தேயு 28:8). புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள் வாழ்த்துதல் சொல்லும் போதும் அல்லது தங்கள் வாசகர்களுக்கு இறுதியுரை கூறும் போதும், *chara* என்ற வார்த்தையின் வடிவத்தையே அவர்கள் அதிகமாக பயன்படுத்தினர் (பார்க்கவும் 2 கொரிந்தியர் 13:11 மற்றும் யாக்கோபு 1:2).

**சந்தோஷமல்லாதது எது**

புதிய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்ட சந்தோஷம் (*chara*) என்ற வார்த்தை வெறும் சந்தோஷமான உணர்வோ அல்லது குதூகலமோ, எல்லா வேளையிலும் அனுபவிக்கப்பட்டதை மாத்திரம் குறிப்பிடுவதில்லை. அது ஏன்?

1. *பிலிப்பியர் 4:4 இவ்வாறு கூறுவதால்:* "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள், சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்!" (பிலிப்பியர் 3:1 மற்றும் 1 தெசலோனிக்கேயர் 5:16 ஐயும் காண்க.) இந்த வசனத்தைப்பற்றி குறிப்பிடும் இரண்டு உண்மைகள் என்னவென்றால், சந்தோஷம் என்பது "ஒரு மகிழ்ச்சியான உணர்வு" மட்டும் அல்ல. ஒன்று "எப்பொழுதும்" என்ற வார்த்தை குறிப்பிடப்பட்டுள்ளது. எந்த ஒருமனிதனும் எப்பொழுதும் சந்தோஷத்தை *உணர்ந்திருக்க* முடியாது. மற்றொன்று, இந்த வசனம் நம்மை உண்மையில் சந்தோஷமாயிருக்க *கட்டளையிடுகிறது*. சந்தோஷம் ஒரு உணர்வு என்ற வகையில் அதனை கட்டளையிட முடியாது. எப்படி ஒருவர் நாம் எப்பொழுதும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்ற கட்டளைக்குக் கீழ்ப்படிய முடியும்?

2. *சந்தோஷத்தோடு கூட மற்ற காரியங்களும் தொடர்புடையதால்.* சந்தோஷம் என்பது அதினோடு நீடிய பொறுமையும் மற்றும் நீடியசாந்தமும் உடையதாகும். கொலோசெயர் 1:11, 12ல் பவுல், அவர் கொலோசெயில் உள்ளவர்களுக்காக ஜெபம் செய்து அவர்கள் இப்படியாக இருப்பதற்கு

*"சந்தோஷத்தோடே கூடிய எல்லாப் பொறுமையும் நீடிய சாந்தமும் உண்டாவதற்கு, மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும், உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம்" என்று எழுதினார். சந்தோஷம் என்பது கடினமான சூழ்நிலைகளை தவிர்த்து அல்ல; மாறாக, அது நற்குணத்தோடு தொடர்புடையது - பொறுமை மற்றும் நீடிய சாந்தம் - இவைகள் கடினமான சூழ்நிலைகளை தாங்கக் கூடியதாகும்.*

*அதுபோல, சந்தோஷம் என்பது பரிசுத்தவான்களைப் பற்றி நல்ல செய்திகளை கேட்கும் போது வருவதாகும். நம் உடன் கிறிஸ்தவர்களைப் பற்றின நல்ல செய்திகளை கேட்டும் போது நாம் சந்தோஷம் அடைவோம். யோவான் குறிப்பிடும்போது அவர் தாம் எழுதுகிறதான மக்களோடு இருப்பதற்கு ஆவலுண்டு என்றும், "அவர்களுடைய சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும்" என்றும் எழுதினார் (2 யோவான் 12). 2 கொரிந்தியர் 7:6, 7, 13ல் பவுல் சொன்னது என்னவென்றால், கொரிந்தியர்களுடைய துக்கத்தையும் மற்றும் பக்தி வைராக்கியத்தையும் அறிந்தபோது அதினிமித்தம் தான் சந்தோஷமடைந்ததாக கூறினார். அவர் பிலிப்பியர்களுக்கு எழுதுகிறபோது, அவர் சொன்னது என்ன வென்றால் "கர்த்தருக்குள் மிகவும் சந்தோஷப்பட்டேன்," ஏனென்றால் அவர்கள் இப்பொழுது விசாரிப்பதற்கு மனமலர்ந்தபடியால் என்று எழுதினார் (பிலிப்பியர் 4:10; பிலேமோன் 7ல் பார்க்கவும்).*

*இதற்கு மேற்பட்டு, உண்மையான சந்தோஷம் என்பது ஒழுக்கத்திலும் மற்றும் சோதனையிலும் தொடர்புடையதாகும். யாக்கோபு எழுதும்போது, "என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது மிகவும் சந்தோஷமடைகிறேன்" என்று எழுதினார் (யாக்கோபு 1:2). ஆதிக் கிறிஸ்தவர்கள் ஒடுக்கப்படுகிறபோது, அவர்கள் அதினிமித்தம் சந்தோஷமடைந்தார்கள் (நடபடிகள் 5:41; மேலும் காண்க 2 கொரிந்தியர் 6:10; 1 பேதுரு 4:13).*

*3. பவுலின் மனோபாவத்தினால். அவர் பிலிப்பியருக்கு எழுதும்போது சிறையில் இருந்து, மரணத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார் (பிலிப்பியர் 1:20) - இருப்பினும் பிலிப்பியர் நிருபம் சந்தோஷத்தைக் குறித்ததாகும்! பவுல் அதே நிருபத்தில் "எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்" என்று எழுதும்போது, நிச்சயமாக கிறிஸ்தவர்கள் எல்லா வேளைகளிலும் கவலையற்ற, ஆர்வமற்றவகையான சந்தோஷத்துடன், உற்சாகமான உணர்வுடன் இருக்க வேண்டும் என்று கூறவில்லை.*

**சந்தோஷம் என்றால் என்ன**

*அது ஒரு சந்தோஷமான உணர்வு அல்ல அல்லது நல்ல உணர்வின் வெளிப்பாடும் அல்ல என்றால் வேதாகம சந்தோஷம்தான் என்ன? புதிய ஏற்பாட்டில் சந்தோஷம் என்பது ஆவிக்குரிய பண்பாடுகளுடன் தொடர்புடையதாய் இருக்கிறது.*

*1. கிறிஸ்துவோடு இணைந்தது. அந்த சாஸ்திரிகள் இயேசுவினிடத்தில் நடத்துகிற வானத்தின் நட்சத்திரத்தைப் பார்த்த போது சந்தோஷமடைந்தனர் (மத்தேயு 2:10). உயிர்த்தெழுந்த (இயேசு) ஆண்டவரை கண்டபோது சீஷர்கள் சந்தோஷமடைந்தனர் (யோவான் 20:20; லூக்கா 24:52). சகேயு இயேசுவை சந்தோஷமாய் வரவேற்றான் (லூக்கா 19:6).*

*2. கிறிஸ்தவன் ஆவது அல்லது இரட்சிக்கப்படுவது. எத்தியோப்பிய*

மந்திரி ஞானஸ்நானம் பெற்று “சந்தோஷத்தோட தன் வழியே போனான்” (நடபடிகள் 8:39). தெசலோனிக்கேயர்கள் “மிகுந்த உபத்திரவத்திலே பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே” “திருவசனத்தை ஏற்றுக்கொண்டார்கள் அல்லது கிறிஸ்தவர்களானார்கள்” (1 தெசலோனிக்கேயர் 1:6).

*3. மற்றவர்களுடைய இரட்சிப்பைக் கேள்விப்படுகிறபோது.* மேலும் புதிய ஏற்பாட்டு காலத்தில் மக்கள் இரட்சிக்கப்பட்டார்கள் அல்லது மற்ற சீஷர்கள் விசுவாசிகளானார்கள் என்று கிறிஸ்தவர்கள் கேள்விப்பட்ட போது சந்தோஷமடைந்தனர். இழந்துபோனவர்கள் இரட்சிக்கப்படும்போது தேவன் சந்தோஷமடைகிறார் (லூக்கா 15). புறஜாதிகள் இரட்சிக்கப்பட்ட செய்தி யூத விசுவாசிகளிடம் “மிகுந்த சந்தோஷத்தை” ஏற்படுத்தியது (நடபடிகள் 15:3). பவுல் கொலோசெயர் மக்களிடம் உள்ள விசுவாசத்தின் உறுதியைக் குறித்து சந்தோஷமடைந்தார் (கொலோசெயர் 2:5) மற்றும் தெசலோனிக்கேயரிடம் உள்ள விசுவாசத்தையும் அன்பையும் குறித்து மிகுந்த சந்தோஷமடைந்தார் (1 தெசலோனிக்கேயர் 3:6-9). கிறிஸ்தவர்கள் சத்தியத்தில் நடப்பதைக் கண்டபோது யோவான் சந்தோஷமடைந்தார் (2 யோவான் 4).

மீண்டும், நாம் பவுலைக் குறித்து சிந்திக்கும்போது, சந்தோஷத்தின் புருஷன், பிலிப்பி ஜெயிலில் பாட்டு பாடினார் (நடபடிகள் 16:25) மற்றும் ரோமஜெயிலில் இருக்கும்போது கூட “எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்” என்று எழுத முடிந்தது. உண்மையில் எந்த ஒரு காரியம் அவரை சந்தோஷமடையச் செய்தது? அவருடைய முடிவான சந்தோஷம் என்னவாக இருக்கும்? அவரால் இரட்சிக்கப்பட்ட மக்கள்! பிலிப்பியர்களே அவருடைய “சந்தோஷமும் கிரீடமுமானவர்களாய் இருந்தார்கள்” (பிலிப்பியர் 4:1). அவர் தெசலோனிக்கேயர்களுக்கு எழுதும்போது “எங்களுக்கு நம்பிக்கையும் சந்தோஷமும் மகிழ்ச்சியின் கிரீடமுமாயிருப்பவர்கள் யார்? நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது அவருடைய சந்நிதானத்திலே நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள்; நீங்கள் எங்களுக்கு மகிமையும் சந்தோஷமுமாயிருக்கிறீர்கள்” என்று எழுதினார் (1 தெசலோனிக்கேயர் 2:19, 20). பவுலின் சந்தோஷமெல்லாம் இரட்சிப்புக்கு வழிநடத்தப்பட்டவர்கள் அதிலே நிலைத்திருப்பதினால் வந்தது.

**பரிசுத்த ஆவியின் கனி என்ற வகையில் சந்தோஷம்**

வேதத்தின் அடிப்படையில் உள்ள சந்தோஷம் இரட்சிப்போடு தொடர்புடையதாய் இருப்பதினால், சந்தோஷம் என்பது ஆவியின் கனியின் பாகமாக இருப்பதாகப் பேசுவதே பொறுத்தமானதாக இருக்கும். ஏன்?

*1. ஏனென்றால் நாம் பரிசுத்த ஆவியினால் இரட்சிக்கப்பட்டோம்.* பரிசுத்த ஆவியானவர் நம்முடைய இரட்சிப்பில் முக்கிய பங்கு வகிக்கிறார். நாம் தண்ணீரினாலும் மற்றும் ஆவியினாலும் மறுபடியும் பிறந்திருக்கிறோம் (யோவான் 3:3, 5), மற்றும் “மறுஜென்ம முழுக்கினாலும் பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்” (தீத்து 3:5). இந்த கழுவுதல் என்பது பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு பேசின வார்த்தைகளுக்கு நாம் கீழ்ப்படியும் போது நடக்கிறது. நாம் பெந்தெகொஸ்தே நாளில் இருந்த மக்களைப் போல, கிறிஸ்துவினிடத்தில் நம்பிக்கை வைத்து, மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்று, மற்றும் பாவமன்னிப்பை பெற்றுக் கொள்ளமுடியும் (நடபடிகள் 2:38).

*2. ஏனென்றால் நாம் இரட்சிக்கப்படும் போது பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்கிறோம்.* நாம் இரட்சிக்கப்படும் போது, நாம் தேவனுடைய பிள்ளைகளாவதற்கு நாம் தேவனுக்கு கீழ்ப்படியும்போது (நடபடிகள் 5:32) ஆவியானவர் நமக்கு கொடுக்கப்படுகிறார் (கலாத்தியர் 4:6). நாம் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறும்போது இவை நடக்கிறது (நடபடிகள் 2:38). நாம் இரட்சிக்கப்படும்போது அல்லது நீதிமானாக்கப்படும் போது கிறிஸ்தவர்களாகிய நாம் "பரிசுத்த ஆவி நமக்குள் வாசம்"[2] செய்வதை பெற்றுக் கொள்கிறோம்.

''நாம் ஆவியினால் இரட்சிக்கப்படுவதினால்'' மற்றும் ''ஆவியை பெற்றுக் கொள்வதினால்'' நாம் நீதிமானாக்கப்படும்போது, அது சந்தோஷத்திற்கு காரணமாகவும் இரட்சிப்பின் முடிவாகவும் - ஆவியின் கனியின் ஒரு பாகமாகவும் உள்ளது. நம்முடைய நீதியினால் உண்டாகும் இந்த சந்தோஷமானது ஒரு நல்ல உணர்வாகவோ அல்லது சிரிக்கக் கூடிய அல்லது அடிக்கடி புன்னகைக் கூடிய தன்மையாகவோ இருப்பதல்ல. மாறாக, அந்த சந்தோஷமானது எப்போழுதும் நம்மிடத்தில் தங்கி, எந்த துக்கமான சூழ்நிலை வரும்போது கூட - அது இருக்கும், ஏனெனில் அப்போதும்கூட நாம் இரட்சிக்கப்பட்ட நிலையில் நிலைத்திருக்கமுடியும்.

**குடும்பத்திலுள்ள சந்தோஷம்**

இப்படிப்பட்டதான சந்தோஷம் குடும்பத்தில் உள்ள நபர்களாகிய நம்மிடையே உண்டானால், நம்முடைய குடும்பமே சந்தோஷமான குடும்பமாக இருக்கும். நீதியினால் கிடைக்கப்படுகிறதான இந்த சந்தோஷம் மகிழ்ச்சியான உணர்வைக் காட்டிலும் ஆழமானதாகும்; இது ஆழமான அனுபவமான, சந்தோஷமும் திருப்தியுமாயிருக்கிறது. இந்த சுகசேமமான உணர்வு எந்த ஒரு எதிர்மறையான சூழ்நிலைகளாலும் அகற்றிவிடப்படமுடியாது. செழிப்பான வாழ்வு என்பது எப்பொழுதும் இருந்து விடாது; துக்ககரமான சமயங்களும் மற்றும் ஏமாற்றமான சூழ்நிலைகளும் நிச்சயமாக வரும். நம்முடைய சந்தோஷம் உலகப்பற்றுடையதாக அல்லது இம்மைக்கான காரியங்களை அடிப்படையாக கொண்டிருந்ததேயானால், "பூச்சியும் துருவும் கெடுக்கும்" மற்றும் "திருடர் கன்னமிட்டுத் திருடுவார்கள்" என்பதை நாம் கண்டுபிடிப்போம் (மத்தேயு 6:19). உலகக் காரியங்கள் நீண்ட நாள் நிலைத்திராது. நாம் நம்முடைய நம்பிக்கையை அந்த சந்தோஷத்தின் மீது வைத்தோமானால், பிறகு, அது இல்லாமற்போகும்போது, நம்முடைய சந்தோஷமான குடும்பம் இனியும் சந்தோஷமாக இருக்காது.

ஆயினும் நம்முடைய சந்தோஷம் ஆவிக்குரிய ஆசீர்வாதத்தை அடிப்படையாகக் கொண்டிருந்ததேயானால் - இரட்சிப்பு மற்றும் நீதிமானாக்கப்படுதலினால் ஏற்படும் அனுபவத்தினால் உண்டாகும் - அப்படிப்பட்டசந்தோஷம் எப்பொழுதும் காணப்படும். இப்படிப்பட்டதான சந்தோஷம் நம்முடைய வாழ்க்கையை மேம்படுத்துகிறது மற்றும் நம்முடைய பாரத்தை குறைக்கிறது. ஒரு பெரும் துயரம் நேரிடும் போது, கிறிஸ்தவர்கள் இப்படி சொல்லலாம், "இந்த சம்பவத்திற்காக வருந்துகிறேன். அதை தாங்குவது கடினமானது; ஆனால் முடிவில் காரியம் ஒன்றுமல்ல, ஏனென்றால் இன்றும் என்னிடத்தில் இரட்சிப்பு உண்டு. என்னுடைய நித்தியத்தை இன்னமும் பரலோகத்தில் தேவனோடு செலவிடுவேன்."

*ஒவ்வொரு நபரும் நீதிமானாக்கப்பட்டிருக்கிறார் என்பதால் குடும்பத்தில் பிரச்சனை வரவே வராது என்ற உத்திரவாதம் இல்லை. ஆயினும், குடும்பத்திலுள்ள ஒவ்வொரு நபரும் விசுவாசமுள்ள கிறிஸ்தவராக இருந்தால் அந்த திருமணமானது நீடிய நாள் நிலைத்திருக்கும் மற்றும் அந்த குடும்பம் சந்தோஷகரமான குடும்பமாயிருக்கும், இல்லை யென்றால் வேறுவிதமாயிருக்கும்.*

## சந்தோஷத்தை வளர்த்தல்

*நம்முடைய குடும்பத்தில் நீதிமானாக்கப்படுவதால் வருகிற சந்தோஷத்தை பெறுவதற்கு நாம் எப்படி உதவ முடியும்?*

**விசுவாசமுள்ள கிறிஸ்தவனாக ஆவது**

*விசுவாசமுள்ள கிறிஸ்தவனாக இருப்பதே, சந்தோஷத்தை அடைவதற்காக எடுத்துவைக்கும் மிக முக்கியமான அடிவைப்பாகும். இந்த எச்சரிக்கை இரண்டுபகுதிகளைக் கொண்டது: (1) ஒரு கிறிஸ்தவனாக ஆவது மற்றும் (2) ஒரு உண்மையான கிறிஸ்தவனாக ஆவது. நாமே நீதிமானாக்கப்படாதிருக்கும்போது நம்முடைய குடும்பத்தில் நீதிமானாக்கப்படுவதை அடிப்படையாக கொண்டு சந்தோஷம் காணப்பட வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. நம்முடைய ஆண்டவர் நம்மை இரட்சிக்க விரும்புகிறார் மற்றும் இரட்சிப்பதற்கு காத்தும் இருக்கிறார்; நாம் அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து இரட்சிப்படைவது என்பது நம்முடைய கையில் தான் இருக்கிறது.*

**விசுவாசமுள்ள ஒரு கிறிஸ்தவனை திருமணம் செய்து கொள்வது**

*நாம் ஒரு கிறிஸ்தவனாக இருப்பது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் நாம் விசுவாசமுள்ள கிறிஸ்தவனை திருமணம் செய்து கொள்வது.[3] இப்படிப்பட்டதான வலியுறுத்துதல் நிராகரிக்கப்பட்டிருக்கக்கூடும். சில மத அமைப்புகள் தங்களுடைய விசுவாசம் அல்லாதவர்களை திருமணம் செய்யக் கூடாது என்று கட்டுப்பாடு செய்திருக்கிறார்கள். இதைத்தான் முஸ்லீம்கள், யூதர்கள், கத்தோலிக்கர்கள், மற்றும் சில புரோட்டடஸ்டன்டுகள் கூட கொள்கையாகக் கொண்டுள்ளனர். திருமணமாகாத எவர் ஒருவரையும் கிறிஸ்தவ துணையை கொள்ளும்படி உற்சாகப்படுத்த வேண்டும்.*

*கிறிஸ்தவ துணைகளை விவாகம் செய்யும் போது கிறிஸ்தவரல்லாதவராக இருந்து, இப்போது கிறிஸ்தவராக இருப்பவர்களுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துவோம், கிறிஸ்தவரல்லாத துணைகளை விவாகம் செய்திருந்தும், கர்த்தருக்காக தொடர்ந்து ஊழியம் செய்யும் உண்மையுள்ள கிறிஸ்தவ ஆண் மற்றும் பெண்ணுக்காக விசேஷமாக தேவனுக்கு நன்றி செலுத்துவோம். தன் வாழ்க்கை துணையின் எந்தவிதமான உதவியும் இல்லாமல் சிலர் தங்கள் பிள்ளைகளையும் கிறிஸ்தவர்களாக்கியுள்ளனர். ஆயினும், புள்ளி விவரத்தின்படி, கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களல்லாதவர்களை திருமணம் செய்து கொள்ளும் போது சாதாரணமாக தேவனுடைய ஊழியத்திற்கு தடையாகவே அவர்கள் முடிவு காணப்படுகிறது. அதனால் எந்த ஒரு கிறிஸ்தவனும் விசுவாசமுள்ள வேறொரு கிறிஸ்தவரையே திருமணம் செய்து கொள்ளுவது மிகவும் முக்கியமானதாகும்.*

*முக்கியமான கருத்தை 2 கொரிந்தியர் 6:14-16 நாம் பார்க்க முடியும்:*

> *அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? ''நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள்'' என்று தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே.*

*அநேகமாக இந்த பகுதியானது கிறிஸ்தவர் அல்லாதவர்களை திருமணம் செய்து கொள்வது பாவம் என்று கூற வில்லை, ஆனால் அது நிச்சயமாக கிறிஸ்தவர் அல்லாதவர்களை திருமணம் செய்து கொள்ளும் ஒருவரை அவர்கள் எதிர் காலத்தைக் குறித்து அதிகமாக சிந்திக்க வைக்க வேண்டும்.*

***மற்றவர்களை கிறிஸ்தவர் ஆவதற்கு உற்சாகப்படுத்துவது***

*இதற்கும் கூடுதலாக, நம்முடைய குடும்பத்திலிருப்பவர்கள் ஒவ்வொருவரும் கிறிஸ்தவர்களாவதற்கு நாம் சிறந்த முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த எச்சரிப்பானது விசேஷமாய் பெற்றோர்களுக்கு நடைமுறைப்படுத்தப்படுகிறது; அவர்கள் தங்கள் பிள்ளைகள் கிறிஸ்தவர்களாவதற்கு உற்சாகப்படுத்த வேண்டும். "நான் என் பிள்ளைகளை சபைக்கு செல்லுவதற்கோ அல்லது ஞானஸ்நானம் பெறுவதற்கோ சொல்லமாட்டேன், ஏனென்றால் நான் அவர்களுடைய தீர்மானத்தில் கட்டாயப்படுத்த மாட்டேன்" என்று பெற்றோர் சிலசமயம் சொல்வதுண்டு. ஏன் செய்யக்கூடாது? நாம் நம்முடைய பிள்ளைகள் சிறந்த பள்ளியில் படிப்பதற்கு அவர்களை உற்சாகப்படுத்துகிறோம், விளையாட்டில் சிறந்து விளக்கும்படியாக அல்லது கலையில் சிறந்து விளங்கவும் மற்றும் அவர்கள் வாழ்க்கையில் எந்த துறையிலும் சிறந்து விளங்கவேண்டும் என்று உற்சாகப்படுத்துகிறோம். அப்படியிருக்க நாம் ஏன் அவர்கள் கிறிஸ்தவர்களாவதற்கு உற்சாகப்படுத்தக் கூடாது? இந்த காரியம் நம்முடைய மதிப்பையும் மற்றும் முக்கியத்துவத்தையும் பிரதிபலிக்கவில்லையா? நம்முடைய பிள்ளைகளைப் பொறுத்தமட்டில் எந்த ஒரு காரியத்தை நமக்கு முக்கியமானதாக கருதுகிறோம்? உலகத்துக்குரிய சந்தோஷத்தையா, உலகசம்பத்துக்களையா? இங்கே இரட்சிப்பும் பரலோகத்தில் நித்தியமான வீடுமா? நான் என்னுடைய பிள்ளைகள் சந்தோஷமாயும் மற்றும் உலகத்தில் அவர்கள் சிறந்தவர்களாயும் இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறபோது, எந்த ஒரு காரியத்திலும், அவர்களும் அவர்கள் பிள்ளைகளும் இரட்சிக்கப்பட்டு பரலோகத்திற்கு செல்வது என்பது எனக்கு முக்கியமானதாகும்!*

*மேலும், நாம் நம்முடைய பிள்ளைகளையோ அல்லது அவர்கள் பிள்ளைகளையோ விட்டுவிடக் கூடாது! முதிர்ந்தவர்கள் தங்கள் பேரப்பிள்ளைகளை நல்ல வழியில் நடத்துவதற்கு காரணமாய் இருப்பது எவ்வளவு ஆச்சரியமாக இருக்கிறது!*

*குடும்பத்திலுள்ள நபர்களை கிறிஸ்தவர்களாக்குவதற்கு உற்சாகப்படுத்துவது முக்கியமானது, ஏனென்றால் கிறிஸ்தவர்களல்லாத மனைவி அல்லது கணவனை உடையவர்களுக்கும் இது பொருந்தும்.* ஒரு கிறிஸ்தவ மனைவியானவள் தன் கணவனுடைய ஆத்துமாவை கிறிஸ்துவுக்குள் ஆதாயப்படுத்திக் கொள்வதற்கு எல்லாவித முயற்சிகளையும் செய்ய வேண்டும் *(1 பேதுரு 3:1, 2).* அதேபோல, ஒவ்வொரு கிறிஸ்தவ கணவனும் அவிசுவாசமுள்ள மனைவியின் ஆத்துமாவை கிறிஸ்துவுக்குள்ளாக ஆதாயப்படுத்திக் கொள்ளுவதற்கு எல்லா வித முயற்சிகளையும் செய்ய வேண்டும். மீண்டுமாக அவர்களை அப்படியே விட்டு விடாமல் இருப்பது மிகவும் முக்கியமான காரியமாகும்! சில கணவர்கள் அல்லது மனைவிகள் ஆண்டாண்டுகளாக கிறிஸ்தவர்கள் ஆவதற்கு மறுத்தவர்கள், ஆனால் முடிவில் கிறிஸ்துவுக்குள் மாறியிருக்கிறார்கள்.

நாம் நம்முடையவர்களை கிறிஸ்துவுக்குள் ஆதாயப்படுத்திக் கொள்வதற்கு முயற்சிக்கும் போது, முடிவில் குடும்பத்திலுள்ள ஒவ்வொரு நபரும் தன்னுடைய மனதை கிறிஸ்துவுக்கு கீழ்ப்படியப் பண்ணுவதற்கு பொறுப்பாளிகளாவார்கள். குடும்பத்திலுள்ள ஒவ்வொரு நபரும் சுவிசேஷத்தை கேட்பதற்கு வாய்ப்புகள் ஏற்படுத்தித்தர வேண்டும், கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும், தன்பாவத்திற்காக மனம் திரும்ப வேண்டும், இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசித்து அறிக்கையிடவேண்டும், மற்றும் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

## முடிவுரை

உங்களுக்கு சந்தோஷமான குடும்பம் வேண்டுமா? *குடும்பத்தில் சந்தோஷம் என்பது நீதிமானாக்கப்படுவதனால் வருவதாகும்.* குடும்பத்திலுள்ள ஒவ்வொரு நபரும் விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களாய் இருந்தால், அந்த குடும்பத்தில் விசேஷமான சந்தோஷமும், மகிழ்ச்சியும், சமாதானமும் மற்றும் பாதுகாப்பும் உலகத்திலுள்ளவர்களால் உணர்ந்து கொள்ளப்பட முடியாததும் அல்லது தெரிந்து கொள்ளப்பட முடியாததுமாயிருக்கும்!

நான் முக்கியமாக கிறிஸ்தவர்களல்லாத கணவன் மற்றும் பிதாக்களுக்கு சொல்வது என்னவென்றால், மற்றும் சவாலாக முன் வைப்பது என்னவென்றால், நீங்கள் கணவராக ஒரு கிறிஸ்தவராக இல்லையென்றால் அல்லது உங்கள் குடும்பத்தின் ஆவிக்குரிய தலைவராக நடந்து கொள்ளவில்லையென்றால், உங்களுடையதாய் இருக்க வேண்டிய வேலையை உங்கள் மனைவியுடைய வேலையாக்குகிறீர்கள். நீங்கள் அவரை உங்கள் குடும்பத்தில் ஆவிக்குரிய பாரத்தை சுமக்கவைக்கிறீர்கள். நீங்கள் உங்கள் குடும்பத்தில் ஆவிக்குரிய தலைமை பொறுப்பை ஏற்றுக் கொள்ள மாட்டீர்களா? நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு சிறந்ததை கொடுக்க நினைக்கிறீர்கள், மற்றும் உங்கள் பிள்ளைகளுக்கு எது சிறந்தது என்று உங்களுக்குத் தெரியும்! அவர்கள் கிறிஸ்தவர்களாக வேண்டுவது முக்கியமானது என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்! அந்த காரியம்தான் உங்கள் பிள்ளைகளுக்கு தேவை யென்றால், நீங்கள் முதலாவது கிறிஸ்தவராக வேண்டும்! நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு தேவையான சகல நன்மைகளையும் கொடுக்க நினைக்கிறீர்கள். நீங்கள் அவர்களுக்கு கொடுக்கக் கூடிய மிக சிறந்த பரிசுப்பொருள் மற்றும் அவர்கள் பெறக்கூடிய சிறந்த பரிசுப் பொருளும் என்னவென்றால் ஒரு கிறிஸ்தவ தகப்பனை!

*மனைவிமாராய் இருப்பவர்களுக்கும் ஒரு வார்த்தை கூற என்னை அனுமதியுங்கள்: நீங்கள் ஒரு கிறிஸ்தவர் அல்லாதவராய் இருந்தால், நீங்கள் கிறிஸ்தவர் ஆக வேண்டும். மேலும், ஒரு கிறிஸ்தவ மனைவியாய், உங்கள் புருஷனுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும். உங்கள் பிள்ளைகள் உங்கள் இருதயத்தை உடைக்கப்பண்ணாதிருக்க வேண்டுமானால், ஆனால் அவர்கள் எழுந்து உங்களை பாக்கியவதி என்று அழைக்க வேண்டுமானால், நீங்கள் கிறிஸ்தவளாய் இருங்கள் மற்றும் தேவனிடத்தில் அன்புகூரவும் கீழ்ப்படியவும் உங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுங்கள்.*

*இரட்சிக்கப்படாதவர்களுக்கு முடிவான என்னுடைய வேண்டுகோள் என்னவென்றால்: "கிறிஸ்துவினிமித்தம் நான் உங்களை வேண்டிக் கொள்கிறேன், நீங்கள் தேவனோடு ஒப்புரவாகுங்கள்" (2 கொரிந்தியர் 5:20). இதில் தான் சந்தோஷம் உள்ளது.*